என்பது இறந்தவர் உடலிற் பூசி அடக்கம் செய்வதற்கு உரிய நறுமணத் தைலம். பொன்னால் அரசனும், மீறையால் மனிதனும் தூபத்தால் கடவுளும் என்று இறைமகன் இயேசுவின் இறைமைத் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

பிறப்பிலேயே ஏழ்மை எனும் சிலுவை, ஊருக்குப் புறம்பே ஒதுக்கப்பட்ட நிலை முள்முடி, கசையடி எனும் துன்பங்களை இறைமகன் இயேசு தாழ்மையோடு ஏற்றுக் கொண்டார். அவரது இறைத்தன்மை வாழ்வில் இழையோடு வாழ்ந்திருப்பதை அறியமுடிகிறது.

**நிறைவாக :**

இயேசு அரசர் என்பதைப் பொன்னும், கடவுள் என்பதைத் தூபமும், துன்புறுபவர் என்பதை வெள்ளைப் போளமும் குறிப்பதாக 2-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரனேயுஸ் கூறுகின்றார். "மாற்கு இயேசுவை கிறிஸ்து என்று அழைப்பதன் மூலம் இவர்தான் இஸ்ரேயலர், எதிர்பார்த்திருந்த மீட்பர், மரித்துயிர்த்த ஆண்டவர் எனச் சுட்டிக்காட்டுகின்றார். யூதர்களை மட்டுமன்று, மனுக்குலம் அனைத்தையும் மீட்பவர்; போரால் அன்று, தம் மரணத்தால் மீட்பவர்; அந்நிய ஆட்சியினின்று பாவத்தின் கொடும் பிடியினின்று மீட்பவர் இயேசு."(மாற் விளக் ப :25) இயேசுவின் மானிட உடலே இறைமகன் மனித வடிவெடுத்து "பாவம் தவிர பிற அனைத்திலும் நம்மையொத்த மனிதப் பிறவியானார்" என்பதேயாகும்.(யோவான் 1;14) "உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை" உலகில் நன்மனதுள்ளவர்களுக்கு அமைதி மெசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் இறைவன் உன்னதத்திலே மகிமை, மாட்சிமை பெறுகிறார். உலகிலே அவரால் அன்பு செய்யப்படுபவர்கள். மெசியா கொண்டு வந்த அமைதியை ஆசீராகப் பெறுகின்றனர். மக்கள் குலமெல்லாம் ஒன்றென வாழ்வால் எண்பித்தார் என்பதிலிருந்து இயேசுவின் பிறப்பில் ஆசிரியர் வீரமாமுனிவர் தேம்பாவணி வழி இறைமைத்தன்மையை அழகுற சித்திரித்துள்ளதை இக்கட்டுரை வழி அறியமுடிகின்றது.





## 7. தேம்பாவணியில் இல்லறத் துறவறம்

**வே. புளோரா பவுலின் மேரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

**முன்னுரை:**

தேம்பாவணி கிறித்தவ சமயத்தைச் சார்ந்த ஒரு காப்பிய நூல். இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவது. கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகள் மற்றும் அறிவுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்நூல் கிறித்தவர்களின் கலைக்களஞ்சியம் என வழங்கப்படுகிறது. இத்தனை சிறப்புடைய தேம்பாவணிக் காப்பியத்தில் சூசை மரியின் இல்வாழ்க்கையில் துறவறத்தை என்ன மனநிலையில் எவ்வாறு கடைபித்தனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**வீரமாமுனிவர் பிறப்பும் ஆற்றிய பணியும்:**

இத்தாலி நாட்டில் 'காஸ்திலியோனே' என்னும் சிற்றூரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 -ஆம் நாளில் பிறந்தார். இவரது பெற்றோர் 'டான் கொண்டல் போ பெஸ்கி', 'எலிசபெத் அம்மையார்' ஆவர். இவரது இயற்பெயர் 'கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி' என்பதாகும். தமிழ் மீது கொண்ட தீராக் காதலால் 'வீரமாமுனிவர்' என்ப் பெயர் மாற்றம் செய்து கொண்டார்.

திருக்காவலூர்க்கலம்பகம், அடைக்கல மாலை, வெண்கலிப்பா, கித்தேரிஅம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி ஆகியவற்றைப் படைத்தார். மரியாளை 'அடைக்கல மாதா' என்று வழிபட்டு அன்னைக்குத் திருக்காவலூரில் கோயிலும் எழுப்பினார்.

வீரமாமுனிவருக்கு முன் தமிழில் அகராதி இல்லை. அகராதி என்ற பெயரே வீரமாமுனிவர் ஏற்படுத்தியது தான்.

1. சதுரகராதி,
2. தமிழ் இலத்தீன் அகராதி,
3. போர்த்துக்கீசியம் இலத்தின் தமிழ் அகராதி,
4. தமிழ் பிரெஞ்சு அகராதி,
5. பிரெஞ்சு தமிழ் அகராதி,

ஒவ்வு ஆறு ஒன்று இலநன்மை உற்றதின் கைமாறு ஆக
செவ் ஆறு என்று உளம் தேர்ந்த சிறிகு உரைப்போனோ? என்றாள்"
(தேம் 6:12)

ஆண்டவன் இந்த மாதிரியான துணைவனை எனக்குத் தந்து, என்னைக் காத்து, நிறைந்த நம்மை யாவற்றினும் மேலாகவும், இதற்கு ஒப்புமையாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லாததாகவும், தங்களை அடைந்துள்ளேன். அதற்குப் பதில் நன்றியாக, நான் கட்டளையிடலாகுமோ? என்றார் மரியாள்.

**இல்வாழ்க்கை:**

இருவரும் இல்லற வாழ்வில் துறவறத்தை மேற்கொண்டனர். ஈரறமும் ஓரறமாக்கி வாழ்ந்து வந்தனர். ஐம்புலனாகிய கதவுகளை அடைத்தனர். நல்லறமே அவற்றிற்கு காவலாக அமைந்தது. அவர்கள் இருவரும் யாதொரு குறையுமின்றி வாழ்ந்தனர்.

அவர்கள், சான்றோர்கள், சேற்றோடு கலந்த நீரை அருந்தாமல், கடந்து சென்று தெளிந்த அலையை உடைய ஊற்றை அடுத்து தூய நீரை உண்ட சிறப்புப் போல, இழிவான இவ்வுலக வாழ்வின் இன்பங்களை எல்லாம் விட்டுவிலகி, வானத்தின் தலைவனான இறைவனோடு பொருந்தி நின்று உள்ளம் பூரித்து வாழ்ந்தனர். இவ்விருவர் உள்ளங்களிலும் குற்றம் இல்லாமல் இருந்தனர். இதை வீரமாமுனிவர்,

"மனமே வேலியாய் வகுத்த சொல்தரும்
ஞானமே தூதனாய் நயப்ப யாவரும்
தானமே தோழனாய் அறிவின் தன்னையாய்
வானமே உறைபுளாய் மடிவுஇல் வாழுவர்" (தேம் 6:48)

என்று கூறியுள்ளார்.

**நிலையில்லா வாழ்வு:**

சூசை மட்டுமின்றி மரியும், இறைவன் மாண்பினைப் போற்றுகிறார். கடவுள் துணையின்றி எவர் வாழ்வும் இல்லை. அப்படி மனிதர்கள் இருந்தால் அவர்களின் வாழ்வோ, தேரின்மேல் பறக்கும் பூ போன்றும், நீர்மேல் படரும் பாசிபோன்றும், நீரினில் தோன்றும் குமிழியினைப் போன்றும், பூமாலையின்மேல் படரும் பனித்துளியினை போன்றும் நிலையற்றதாகும் என்று மரியாள் கூறுகிறார். மேலும், கனவிற்கண்ட செல்வம் போன்றும், மேகத்தில் தோன்றிய மின்னல் போன்றும், நாடகம் போடுவோர் போடும் வேடம் போன்றும் நிலைபெற்றதென்றும் கூறினார். முனிவர்,





"கனவில் பிடித்த தனமன்றோ?
கனம்நின் றொல்இப் பாய்ந்த மின்னோ?
சினிவித் திளைதீ முன்வையோ?
திளைப்ப உவரில் பொய் உறையோ?" (தேம் 6:48)

என்று கூறியுள்ளார்.

**இல்லறத் துறவறம்:**

சூசையும் மரியாளும் கடைபிடித்த துறவற ஒழுக்கம் எதைப்போன்று தோன்றியது என்றால், உடலை ஒழித்துவிட்ட உயிர்கள் போலத் தோன்றினார்கள். அதே நேரத்தில் பிற உயிர்களுக்கெல்லாம் தாமே உடலாகவும் இருந்து காத்தனர். இதனையே வள்ளுவரும்,

"நல்குரவு என்னும் இடும்பையுள் பால்குரைத்
துன்பங்கள் சென்று படும்" (திருக்.1045)

வறுமை என்று சொல்லப்படும் துன்பம் ஒன்றனுள்ளே பலவகையான துன்பங்களும் வந்துசேரும் என்ற குறள் மூலம் வறுமையினை எடுத்துக்காட்டியுள்ளார். வறுமையின் கொடுமையினை அறிந்த சூசையும், மரியாளும் உலகினர்க்கெல்லாம் உயர்தரு மருந்தாக இருந்தார்கள். பொன்மலையினைச் சேர்ந்த காகம் பொன்னிறமடைவது போன்று இவர்களைச் சேர்ந்தவர்கள் நன்னெறியினை அடைந்தனர். ஈரறத்தின் கண்ணாடியாக அவர்கள் வாழ்வு அமைந்தது. இதனையே சே. சுந்தரராஜன் அவர்கள்,

"மலர்கொடியை உடைய சூசை இறைவனுடைய அருள் ஒன்றேயல்லாமல் இவ்வுலகில் மனிதர் தேடுவதற்குரிய உயர்ந்த பொருள்வேறு ஒன்றுமில்லை. நான் என்ற அகப்பற்றும், எனது என்ற புறப்பற்றும் நீங்கப் பெற்று வாழ்வதே சிறந்த வாழ்வாகும்" என்றார். இதையே திருவள்ளுவரும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்.50)

என்று கூறியுள்ளார்.

**முடிவுரை:**

இவ்வாறாக, இல்லறத்தில் நுழைந்தவர்கள் துறவறம் மேற்கொள்ள முடியாது என்ற கூற்றினைப் போக்கி, இல்லறத் துறவறத்தினை மேற்கொண்டு உயிரினால் சூசையும், மரியாளும் இணைந்து, இறைவனைப் போற்றியும், ஏழைகளுக்கு உதவியாகவும் இருந்ததினால் மண்ணுலகில் விண்ணுலக வாழ்வான இன்று வாழ்வை வாழ்ந்து வந்ததை அறிய முடிகிறது.